செய்தி வெளியீடு எண்:773 நாள்:24.09.2021

செய்தி வெளியீடு

தமிழ் வளர்ச்சித் துறைக்கான 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கை அறிவிப்பில் "நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவர்களான **மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு, அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர்** ஆகியோரின் கருத்துக்களையும் சமூகச் சிந்தனைகளையும் இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வண்ணம் ஆண்டுதோறும் அவர்களது பிறந்த நாளன்று மாவட்ட அளவில் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்களுக்குப் பேச்சுப் போட்டிகள் நடத்திப் பரிசு, பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது. அதற்கிணங்க **மகாத்மா காந்தி பிறந்த நாளான அக்டோபர் 2ஆம்** நாளில் அனைத்து மாவட்டங்களிலும் கல்லூரி, பள்ளி மாணவர்களுக்குத் தனித்தனியே பேச்சுப் போட்டி நடைபெறவுள்ளது.

போட்டித் தலைப்புகள் போட்டி நடைபெறும் நாளன்று அறிவிக்கப்பெறும். போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டு பரிசுத் தொகையும் , பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்பெறும்.

பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் கல்லூரி மாணவர்களை அந்தந்த கல்லூரி முதல்வரே
2 பேர் வீதம் தெரிவு செய்து போட்டிக்கு அனுப்பப்பெற வேண்டும். அதேபோன்று பேச்சுப் போட்டியில் பங்கேற்கும் பள்ளி மாணவர்களை அந்தந்தப் பள்ளித் தலைமையாசிரியர்களே 2 பேர் வீதம் தெரிவு செய்து போட்டிக்கு அனுப்பப்பெற வேண்டும்.

**பேச்சுப் போட்டியில் வெற்றி பெறும் கல்லூரி மாணவர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும்**

1. முதல் பரிசு ரூ.5000/–
2. இரண்டாம் பரிசு ரூ.3000/–
3. மூன்றாம் பரிசு ரூ. 2000/– என்ற வகையில் வழங்கப்படும்.

## போட்டி நாள் : 02.10.2021

| | | |
|---|---|---|
| பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி | – | முற்பகல் 10.00 மணி முதல் |
| கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டி | – | பிற்பகல் 2.00 மணி முதல் |

மேலும் இப்போட்டியில் பங்கேற்கும் அரசுப் பள்ளி மாணவர்களிலிருந்து மட்டும் மாவட்டத்திற்கு இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்புப் பரிசுத் தொகை ரூ.2000/– வீதம் 2 பேருக்கு தனியே வழங்கப்பெறும்.

கல்லூரி, பள்ளி மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் நடைபெறும் இடம் அந்தந்த மாவட்டத் தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் / உதவி இயக்குநர் வாயிலாகவும் அறிவிக்கப்பெறும்.

மேலும் அரசு அறிவித்துள்ள தீநுண்மி தொடர்பான வழிகாட்டுதல்களை முழுமையாகப் பின்பற்றி போட்டிகள் நடத்தப்பெறும்

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9